பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

19 OCT 1963

ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை.

மலர்: 7 | 1963, ஒற்றோபர், 9ந் திகதி | இதழ்: 29

# தேசிய சேமிப்பு இயக்கம்

## நிதி அமைச்சர் அங்குரார்ப்பணஞ் செய்துவைத்தார்

**1963/64 ம் ஆண்டின் தேசிய சேமிப்பு இயக்கத்தை இன்று அங்குரார்ப்பணஞ் செய்து வைப்பதில் நான் அதிக மகிழ்ச்சியடைகின்றேன். 1963/64 ம் ஆண்டின் "எதிர்காலத்துக்கென சேமியுங்கள்" இயக்கம் என இதற்கு பெயரிடப்பட்டிருக்கிறது. இவ்வாண்டிற்கு தேசிய சேமிப்பு இயக்கத்தின் இலக்கு 12 கோடியே 50 லட்சம் ரூபாவாகும்.**

கடந்த ஆண்டிலும் அவர்களுடைய இலக்கு 12 கோடியே 50 லட்சம் ரூபாவாகவே இருந்தது. இது வரை கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி 12 கோடியே 20 லட்சம் ரூபாவை மட்டுமே எம்மால் சேகரிக்க முடியுமெனத் தெரிகிறது.

கடந்த ஆண்டின் இலக்கில் 30 இலட்சம் ரூபா குறைந்ததையிட்டு நாங்கள் சஞ்சலமடையத் தேவையில்லை. அவ்வாறு சஞ்சலமடைவதை விடுத்து எதிர் வரும் ஆண்டிற்கான ஒரு சவால் என அதனை மனதிற்கொண்டு 12 கோடியே 50 லட்சம் ரூபா மட்டுமன்றி மேற்கொண்டும் ஒருசில கோடி ரூபாக்களைச் சேகரிக்க எம்மால் இயன்ற எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்துக்கெனச் சேமியுங்கள் இயக்கம் தனிப்பட்டவர்களின் எதிர்காலத்தின் பொருட்டு சேமிக்கும் இயக்கமாக மட்டுமல்லாமல் முழு நாட்டிற்காகவும் சேமிக்கும் இயக்கம் என்பதை ஞாபகத்திலிருத்திக்கொள்ளல் வேண்டும்.

முதலீடு செய்வதற்கு தனிப்பட்ட ஒருவருக்கு பலதரப்பட்ட துறைகள் இருக்கின்றன. எமது அறைகூவலுக்குச் செவிமடுத்த எம்நாட்டு மக்கள் கடந்த இரண்டு அல்லது மூன்று வருடகாலத்தில் புதிய, அத்தியாவசிய கைத்தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்களென்பதைக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இறக்குமதிகள்

(3 ம் பக்கம் பார்க்க)

## இலங்கை-இந்திய பிரச்சினை

### இந்திய மக்களுக்கு திரித்துக் கூறப்படுகிறது

பிரதிநிதிகள் சபையில் சமீபத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட வாக்குவாதத்தின்போது பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி இலங்கை-இந்தியப் பிரச்சினையைக் குறித்து நிகழ்த்திய சொற்பொழிவைத் தொடர்ந்து, இது விஷயமாகத் தாங்கள் இதுவரை கையாண்ட போக்கு நியாயமானதே என்பதை வலியுறுத்தும் நோக்கத்துடன் இந்தியப் பத்திரிகைகளிற் சில ஒரு பிரசார இயக்கத்தை நடாத்தி, வந்துள்ளன. இப்பிரசார இயக்கத்தின்போது இப்பிரச்னை சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் அனுட்டித்த கொள்கையை கண்டிக்கும் விதத்தில் குறும்புத்தனமானவையும் தவறான கருத்தை ஏற்படுத்துபவையுமான பல தகவல்கள் பிரசுரிக்கப்பட்டனவென்று தெரிய வந்தது. இந்திய மக்களுக்கு இவ்விஷயம் வேண்டுமென்றே திரித்துக் கூறப்படுகிறதென்று உணரப்பட்டதால், இலங்கை அரசாங்கத்தின் கட்டளையின் பேரில் டில்லியிலுள்ள இலங்கை ஹைகொமிஷன் இலங்கை அரசாங்கத்தின் நிலைமையை விளக்கி இந்தியப் பத்திரிகைகளுக்கு ஒரு செய்தியை விடுத்தது.

இந்தியப் பத்திரிகைகளுள் ஒன்று மட்டும் இச்செய்தியை பூரணமாக பிரசுரித்திருக்கிறதென்று காணப்பட்டது. வேறு சில பத்திரிகைகள் ஓரளவுக்குச் சிதையுண்ட இச்செய்தியின் பிரதியை பிரசுரித்துள்ளன. இதர பத்திரிகைகள் இதனைப் பிரசுரிக்காமலே விட்டுவிட்டன.

எனவே, டில்லியிலுள்ள எமது ஹைகொமிஷன் இந்திய பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியின் முழுப் பிரதியையும் பொது மக்களின் கவனத்துக்காக மந்திரி காரியாலயம் இப்பொழுது பிரசுரித்திருக்கிறது.

இச் செய்தியை இவ்விதழில் பிறிதொரு பக்கத்தில் காணலாம்.

### பிரதமரின் சோவியத் விஜயம்

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் ஒக்டோபர் மாதம் 21 ந் தேதி தொடக்கம் 29 ந் தேதிவரை சோவியத் ருஷ்யாவுக்கு உத்தியோக பூர்வமாக விஜயஞ் செய்வார்கள். சோவியத் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பிரதமர் இவ்விஜயத்தை மேற்கொள்கிறார்.

## பாடசாலைகளில் மத அனுஷ்டானம்

**பாடசாலைகளில் சமயபாடம் போதிப்பதுபற்றியும், சமய தினங்களை அனுஷ்டிப்பது பற்றியும் கல்விப் பகுதி நாட்டிலுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் விசேஷ அறிவுரைகள் அனுப்பியுள்ளது.**

மனித குலத்தை மேம்படுத்துவதற்காகவே மதங்கள் இருப்பதாகவும், மாணவர் குலத்தைப் பிளவுபடுத்தும் அம்சமாக மதம் அமைந்துவிடக்கூடாதெனவும் அந்த அறிவுரைகளில் கல்விப் பகுதி சுட்டிக்காட்டியுள்ளது. ஒவ்வொரு மதத்தையும் மதிக்கவும், மதங்களின் வேறுபட்ட மார்க்கங்களைப் புரிந்து பாராட்டவும் பிள்ளைகளைப் பழக்கவேண்டும் என பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். எல்லா மாணவர்களையும் கொண்ட பொதுக்கூட்டம் ஒன்றைத் தலைமை ஆசிரியர்கள் வாரத்தில் ஒரு முறை கூட்ட வேண்டும் எனவும், பல்வேறு மதங்களைச் சார்ந்த மாணவர்களிடையே சகிப்புத் தன்மையை வளர்ப்பதற்கு இக்கூட்டங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் தலைமை ஆசிரியர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். கூட்டத்தில் உள்ள மாணவர்கள் ஒரே மதத்தைச் சார்ந்தவர்களாக இல்லாவிட்டால், மத அனுஷ்டானம் எதுவும் அனுசரிக்கப்படக்கூடாது. ஆனால், எல்லா மாணவர்களும் ஒரே மதத்தைச் சார்ந்வர்களாக இருந்தால், அந்தக் குறித்த மதத்தின் அனுஷ்டானம் அனுசரிக்கப்படலாம்.

வெவ்வேறு மதங்களைச் சார்ந்த மற்ற மாணவர்கள் இதர நாட்களில் தனித்தனி கூட்டத்தினராகக் கூடி, அவரவர் மத அனுஷ்டானங்களைப் பின்பற்ற வகை செய்யவேண்டும் என்றும் தலைமை ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மதத்தையும் சார்ந்த சிரேஷ்ட ஆசிரியர் இத்தகைய கூட்டங்களை நடத்த வேண்டும். தலைமை ஆசிரியர் குறிப்பிட்டபடி எல்லா ஆசிரியர்களும் பிரசன்னமாகி, மாணவர்களுக்கும் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

## இடைநிலைப் பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதித்தல்

**கடந்த ஆண்டில் கடைப்பிடிக்கப்பட்ட அதே ரீதியில் 1964 ஆம் ஆண்டிலும் இடைநிலைப் பாடசாலைகளிலும் வகுப்புகளிலும் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர். கிடைக்கக்கூடியதாக இருக்கும் வெற்றிடங்களின் தொகையிலும் பார்க்க அனுமதி கோரும் பிள்ளைகளின் தொகை அதிகமாகக் காணப்படும் பட்சத்தில் போட்டிப் பரீட்சையொன்றின்மூலம் சமய விகிதாசாரப்படி தேர்வு நடைபெறும்.**

ஒவ்வொரு பாடசாலையிலும் அனுமதிப்பதற்கு திறமைக்கும் முன்னுரிமைக்கும் ஏற்ப பிள்ளைகளைத் தெரிவு செய்யும் வண்ணம் இடை நிலைப் பாடசாலைகளுக்கும் வகுப்புகளுக்குமான பிரவேசப் பரீட்சையொன்றை அந்தந்தப் பிரதேசத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு அந்தந்தப் பிரதேசத்தின் கல்வி அதிகாரிகளைக் கேட்டுள்ளது, கல்விப்பகுதி.

மேல் வகுப்பொன்றில் படித்துக் கொண்டிருக்கும் எந்த மாணவருக்கும் கீழ் வகுப்பொன்றில் அனுமதி வழங்கப்பட மாட்டாது. உதாரணமாக 6 ஆம் வகுப்பிலோ 7 ஆம் வகுப்பிலோ சித்தியெய்தியுள்ள மாணவனொருவன், குறிப்பிட்டுள்ள வயதெல்லைக்குள் அவன் இருந்தாலும்கூட 6 ஆம் வகுப்புக்கான பிரதேசப்பரீட்சையை எடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டான்.

அனுமதி கோருவதற்கு, பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பிக்குமாறு பெற்றோரும் பாதுகாவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதுகாலவரை கடைப் பிடிக்கப்பட்டு வந்த அதே நியதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றுக்கேற்ப தங்கள் பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்கள் பற்றி அறிவித்து அவற்றை நிரப்புவதற்கு நேரகாலத்தோடு நடவடிக்கைகள் எடுக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வகுப்புகளுக்கு நடத்தப்படும் தேர்வுகளில் கூட குறித்த ஒரு மதகுழுவினைச் சார்ந்த மாணவர்களது விகிதாசாரத்துக்கு சமமான தொகையினருக்கே முன்னிடம் அளிக்கப்படும்.

### சீன மக்கள் குடியரசுக்கு நல் வாழ்த்து

சீனி மக்கள் குடியரசின் தேசிய தினமாகிய 1963 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாந் திகதியன்று சீனமக்கள் குடியரசின் பிரதம மந்திரி அவர்களுக்கு நல்வாழ்த்துச் செய்தியை இலங்கைப் பிரதமர் அனுப்பியுள்ளார்.

### புடவைகள் ஒதுக்கி வைத்தல்

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் கீழ் வேலை செய்யும் பணியாளருக்காக இனிமேல் புடவைகளை ஒதுக்கி வைக்கக் கூடாதென கூட்டுறவு மொத்த ஸ்தாபன முகாமையாளர் கட்டளை பிறப்பித்துள்ளார். இப்பொழுது குறைவாகக் கிடைக்கும் புடவைகளை முதலில் கூட்டுறவு மொத்த ஸ்தாபனப் பணியாளர் வாங்க அனுமதிப்பதால் பொதுமக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கும் புடவைகளின் இருப்பு அருகிவிடுகின்றதெனப் பொது மக்கள் முறையிட்டதன் காரணமாக இவ்வித முடிவு செய்யப்பட்டுள்ளது.

# தாய்ப்பால்—3

உங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே சிறந்த உணவாகும். நீங்கள் குழந்தைக்குப் போதிய அளவு பால் கொடுக்க வேண்டுமானால் நீங்கள் சிறந்த ஆகாரங்களை உட்கொள்ளுவதோடு பாலும் உட்கொள்ள வேண்டும்.

தாய்ப்பாலே இன்றும் குழந்தையின் பிரதான உணவாக இருக்கும்.

குழந்தைக்குத் தேவையான பாலைக் கொடுப்பதற்கு நீங்கள் ஒரு நாளுக்கு இரண்டு கிளாஸ் பாலாவது பருக வேண்டும்.

**குழந்தையின் புதிய உணவு**

குழந்தை விரைவாக வளருகின்றபடியால் அதற்கு இன்னும் ஒரு புதிய உணவு தேவைப்படுகிறது. குழந்தை இவ்வளவு நாட்களும் உண்டு வந்த பழரசம், மீனெண்ணெய், பப்பாப்பழம் இவைகளோடு **முட்டையின் மஞ்சட்கருவும்** ஒரு உணவாகவேண்டும்.

**முட்டையின் மஞ்சட்கரு**

இதில் "எ" "பி" "டி" ஆகிய சீவசத்துக்களும் மிக முக்கியமான இரும்பு உலோகச் சத்தும் அடங்கியிருக்கின்றன. இரத்த சுத்திக்கு இந்த வயதில் இரும்புச் சத்து அவசியம், முட்டைக்கருவிலிருந்து இதைப் பெறலாம். அதைப் படிப்படியாகக் கொடுத்து வந்தால் வயிற்றில் எதுவிதமான கோளாறுகளும் உண்டாகாது. உயிர்க்கரு இல்லாத முட்டையும் உயிர்க்கரு உள்ள முட்டையைப் போன்று சத்துக்கள் உள்ளதே. ஆகையால் நீங்கள் உயிர்க்கரு உள்ள முட்டையை உடைக்க விரும்பாவிடின் உயிர்க்கரு இல்லாத முட்டையைப் பாவிக்கலாம்.

**எவ்வாறு முட்டைக் கருவைத் தயாரிப்பது !**

இப்பொழுது குழந்தைக்குச் சிறிய அளவு மஞ்சட் கருவே தேவை. இதை அரை அவியல் முட்டையிலிருந்து பெறலாம். அதை எவ்வாறு பக்குவம் செய்யலாம் ?

1. ஒரு புதிய முட்டையைச் சுத்தமான ஒரு கிண்ணத்தில் (அல்லது ஒரு சுத்தஞ்செய்யப்பட்ட தேங்காய்ச் சிரட்டையில்) வைக்கவும்.

2. அதில் முட்டையை மூடக் கூடிய அளவு கொதிநீரை ஊற்றி வேறொரு பாத்திரத்தால் மூடி விடவும்.

3. முட்டையைக் கையினால் எடுக்கக் கூடிய அளவு கொதிநீர் ஆறும்வரை விட்டால் குழந்தைக்குச் சரியான பதமாகும்.

4. அதைச் சுத்தமாக உடைத்து ஒரு தேக்கரண்டியை உபயோகித்து ஒரு தட்டையான பாத்திரத்தில் ஊற்றுக. இதில் $\frac{1}{4}$ தேக்கரண்டி மஞ்சட் கருவை எடுத்து, ஆரம்பத்தில் குழந்தைக்குக் கொடுக்கலாம். மிஞ்சிய முட்டையை வீணாக்காமல் தாய் அல்லது மற்றப் பிள்ளைகள் சாப்பிடலாம்.

**இந்த வயதிற் குழந்தையின் நாளாந்த உணவு :—**

1. இந்த வயதில் நாலு மணித்தியாலத்திற்கு ஒரு முறை தாய்ப் பாலூட்டப்படுவதால் குழந்தை திருப்தி அடைந்து இரவு முழுவதும் பசியினால் வருந்தாமல் நன்கு நித்திரை செய்யும்.

2. நீங்கள் தாய்ப்பாலூட்டியபின் பழச்சாறோ அன்றி முட்டை மஞ்சட் கருவோ ஊட்ட நினைத்தால், அதை விரும்பியுண்ணக் குழந்தைக்குப் பசியிருக்காது. ஆகையால் எப்பொழுதும் பாலூட்டு முன்பே எதும் புதிய ஆகாரத்தை உண்ணப் பழக்கவேண்டும்.

**உணவூட்டச் சிறந்த நேரங்கள் பின்வருமாறு:—**

**மீனெண்ணெயுடன் பழச்சாறும் பப்பாப் பழமும்**

காலை 10 மணியளவில் குழந்தையைக் குளிப்பாட்டிய பின் கீழ்க்கண்டவாறு கொடுக்கலாம் :—

1. 2 மேசைக்கரண்டி பழச்சாறு (எலுமிச்சம்பழம், நெல்லி அல்லது தோடம் பழம்) 2 மேசைக் கரண்டி கொதித்தாறிய நீரும் $\frac{3}{4}$ தேக்கரண்டி சீனியுடனும்.

(தக்காளிப் பழச் சாறுயிருந்தால் 4 மேசைக் கரண்டியுடன் $\frac{3}{4}$ தேக்கரண்டி சீனி கலந்து கொடுக்கவும். புளிப்பான பழங்களாயிருப்பின் சிறிது அதிகமான அளவு நீரும் சீனியும் கலக்க வேண்டியேற்படலாம்).

2. $\frac{1}{2}$ தேக்கரண்டி மீனெண்ணெய் பழச்சாற்றின்மீது விட்டுக்கொடுத்தால் குழந்தை இலகுவாக உட்கொள்ளும் அல்லது நிலையத்திற் கொடுக்கப்படும் சிறிய மீனெண்ணெய்க் குளிசைகளைக் கொடுக்கலாம்.

3. 1 மேசைக்கரண்டி நன்றாகப் பழுத்த, மசிக்கப்பட்ட பப்பாப்பழம்.

**முட்டை மஞ்சட் கரு**

இதைத் தாய் குளித்து மத்தியானப் போசனத்தை முடித்தபின் தாய்ப் பால் ஊட்ட முன்னர் பின்வருமாறு கொடுக்க வேண்டும் :—

4 மாதக் குழந்தைக்கு $\frac{1}{4}$ தேக்கரண்டி, ஒவ்வொரு நாளும்.

$4\frac{1}{2}$ மாதக் குழந்தைக்கு 1 தேக்கரண்டி, ஒவ்வொரு நாளும்.

5 மாதக் குழந்தைக்கு 2 தேக்கரண்டி, ஒவ்வொரு நாளும்.

6 மாதக் குழந்தைக்கு 1 முட்டையின் மஞ்சட் கரு முழுவதும். முட்டை ஒவ்வொரு நாளும் கொடுப்பதற்குப் பண வசதியில்லாவிட்டால், வாரத்தில் மூன்று நான்கு முறைகளாவது கொடுக்க வேண்டும்.

**தாய்மார் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியவை :—**

1. இதற்கு முன் சிகிச்சை நிலையத்திற்கு நீங்கள் போயிராவிட்டால், இப்பொழுது தாதிப் பெண்ணிடம் 2 ம் துண்டுப் பிரசுரத்தைக் கேட்டு வாங்குங்கள். அதில் பழச்சாறு எப்படித் தயாரிப்பது, மீனெண்ணெய் எப்படிக் குழந்தைக்குக் கொடுப்பது என்னும் விஷயங்கள் விளங்கப்படுத்தப்பட்டிருக்கின்றன.

2. குழந்தைக்கு முன்பு ஒரு பொழுதும் மீனெண்ணெய், பழச்சாறு என்பன கொடுத்திராவிட்டால், அவற்றைப் படிப்படியாகக் கொடுத்துப்பழக்கிக் கொண்டு வரவேண்டும். ஆரம்பத்தில் மிகச் சொற்பமாக அல்லது $\frac{1}{2}$ தேக்கரண்டி அளவு கொடுக்கலாம். ஒரு புது உணவை ஊட்டி மூன்று நான்கு நாட்களுக்குப் பிறகு அடுத்த புது உணவைக் கொடுக்க வேண்டும். பின் படிப்படியாக அந்த உணவின் அளவைக்கூட்டலாம்.

3. உணவு நேரங்களுக்கிடையில் குழந்தைக்குத் தாகம் உண்டாகாமல் கொதித்தாறிய நீர் கொடுக்க வேண்டும். இதை தேக்கரண்டியினால் பருக்கலாம். ஏனெனில் போத்தல் மூலம் குடித்துப் பழகிய குழந்தை தாயின் முலையிலிருந்து உமிழ விரும்பாது.

4. குழந்தைக்கு உணவூட்டும் பாத்திரங்கள் ஒவ்வொரு நாளும் கொதிநீரில் கழுவப்பட்டு ஈ முதலியவை வந்து படியாமல் மூடி வைத்திருக்க வேண்டும். (மூடுவதற்குப் பிளாஸ்டிக் துணி மிகவும் உபயோகமானது).

**குழந்தைக்கு எவ்விதமான உடையணிவது**

நல்ல வர்ணங்களில் உள்ள பருத்தி நூல் உடைகள் குழந்தைக்கு அழகாகவும், சுகமாகவும், பணச் செலவாகாமலும் அமையும். பட்டுக்களும், நைலன் துணிகளும் பணம் அதிகம் செலவாவதோடு துவைக்கும் பொழுது சுருங்கிச் சாயம் போகும். எனவே எல்லாவற்றிற்கும் பருத்தியாடையே சிறந்தது.

எல்லாவிதமான துணிகளிலும் **பருத்தியாலான** துணியே குழந்தையின் ஆடைகளுக்குச் சிறந்தது.

**பருத்தியாடை**

1. எங்கள் உஷ்ண தேசத்தில் உடலை அதிக வெப்பத்திலிருந்து பாதுகாக்கக் கூடியது.

2. குழந்தையின் வியர்வையை நன்றாக உறிஞ்சும்.

3. தோலை உராயாமல் மென்மையாக இருக்கும்.

4. நன்றாகத் துவைத்து உபயோகிக்கக் கூடியது.

5. செலவு குறைந்தது.

**பட்டும் நைலனும்**

குழந்தையின் வியர்வையை உறிஞ்சாமல் தேகத்திற் கசகசக்க விடும்.

துவையல் தாங்காது.

அதிகப் பணச்செலவை உண்டாக்கும்.

**கம்பளி**

வெறும் உடம்பில் அணிந்தால் சொறிவு ஏற்படும்.

கம்பளி அதிகம் சூடானது, ஆனால் மலைநாட்டுக் குழந்தைகளுக்கு உகந்தது.

**விளானல்**

அதிகம் சூடானது. ஆனாலும் குறை மாதத்தில் பிறந்த பிள்ளைகளுக்கும் நிறைகுறைந்த பிள்ளைகளுக்கும் சிறந்தது. ஏனெனில் இக்குழந்தைகளுக்கு இலகுவில் தடிமல் பிடிக்கக்கூடுமாகையால் அவர்களைக் குளிரினின்று பாதுகாக்க வேண்டும்.

விளானல் குளிரான மலைநாடுகளில் வாழும் குழந்தைகளுக்கும் மிகச் சிறந்த உடையாகும்.

பின்பக்கம் திறந்து, நாடாவினால் கட்டக் கூடிய சிறிய சட்டைகள் குழந்தைகளுக்கு நல்லது. ஏனென்றால்—

(1) அவற்றைக் கெதியாகவும் இலகுவாகவும் போடவும் கழற்றவும் முடியும்.

(2) குழந்தைகளுக்குத் தலைபெரிது. ஆகையால் தலை போகக் கூடிய அளவு சட்டையின் கழுத்தைப் பெரிதாக்கினால் சட்டைக்கழுத்து மிகப் பெரிதாயிருக்கும்.

(3) குழந்தைக்கு 7—8 மாதங்களாகிய பின்பும் போடக்கூடிய அளவாக இச்சட்டைகள் 14 அங்குலம் நீளமுள்ளவைகளாகத் தைக்கப்படலாம். குழந்தை சிறிதாகயிருக்கும்பொழுது இச்சட்டைக்குப் பெரிய மடிப்பைத் தைத்துப் பின் சிறிதாக்கலாம்.

# அரசாங்க சேவைக் கொமிஷன் நியமனங்கள்

பின்வருவோரை அவர்கள் பெயர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு நியமித்திருக்கிறது, அரசாங்க சேவைக் கொமிஷன் :—

உள்ளூர் அரசிறைக் கொமிஷனர்—
திரு. எஸ். சிற்றம்பலம்.

பிரதிக்கொமிஷனர்கள், உள்ளூர் அரசிறைப் பகுதி—
திரு. சீ. பீ. ஈ. விக்ரமசிங்க.
திரு. சீ. சிவப்பிரகாசம்.

புகையிரதக் களஞ்சியத்தின் உதவி அத்தியட்சர், புகையிரதப் பகுதி—
திரு. டபிள்யூ. ஜே. எம். விமலரத்ன.

விவசாய உத்தியோகத்தர், விவசாயப்பகுதி—
திரு. எச். எல். விஜேசேகர.

உபகரண அத்தியட்சர், தபால், தந்திப்பகுதி—
திரு. டீ. பீ. எல். வில்சன் சில்வா.

உதவி விலை மதிப்பாளர், விலை மதிப்புப் பகுதி
திரு. எம். விஜயசிரி.

படம் வரைவு அலுவலக உதவியாளர், நில அளவைப் பகுதி—
திரு. டபிள்யூ. டீ. எம். அபேசேகர.

படம்வரை அறிஞர் விசேட தரம், நில அளவைப் பகுதி—
திரு. டீ. சீ. ஏ. சேனரத்–யாப்பா.

பொலிஸ் அத்தியட்சர், தரம் II, பொலிஸ் பகுதி—
திரு. ஆர். இராஜசிங்கம்.

வேலைகளப் பொறியியளாளர், சாதனமுறை துணைதொழில் நிலையம், இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரிப் பகுதி—
திரு. டீ. ஆர். டபிள்யூ திஸநாயக்க.

உதவிக் கல்வி அதிபதி, கல்விப் பகுதி—
திரு. பீ. பீ. எம். சேனநாயக்கா.

படம்வரைவு அலுவலக உதவியாளர்கள், நீர்ப்பாசனப் பகுதி—
திரு. டீ. எப். த பெரேரா.
திரு. ஆர் சீ. கே. பீரிஸ்.

விசேட வகுப்பு, தந்தி, தொலைபேசிப் பரிசோதகர்கள், தபால், தந்திப்பகுதி—
திரு. ரீ. ஜீ. ஏ. அபேவர்தன.
திரு. ஜீ. ஈ. செனெவிரத்ன.
திரு. எஸ். ஐ. சலிஹு.

விசேட தர விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயப் பகுதி—
திரு. எம். நடராஜா.
திரு. எம். எம். ஜினநந்த.
திரு. சீ. டபிள்யூ. உடவெல.

மின்சாரப் பொறியியலாளர், விசேட தரம், மின்சாரப் பகுதி—
திரு. டபிள்யூ. டபிள்யூ. பொன்சேகா.

# அரசாங்க கேள்விப் பத்திரங்கள்

**சௌக்கியப் பகுதி**

என் 2458—1964 ம் ஆண்டிற்கு கண்டிப் பிரிவிலுள்ள வைத்திய நிலையங்கட்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 30.10.63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 2469—இரத்தினபுரிப் பகுதி சௌக்கிய அத்தியட்சகர் இரத்தினபுரி சௌக்கியப் பகுதியிலுள்ள வைத்தியசாலைக்கு போசனம் கொடுப்பதற்கு ஏற்ற கேள்விப் பத்திரங்களை 26.10.63 வரை ஏற்றுக் கொள்வார்.

என் 2497—1964 ம் ஆண்டிற்கு மாத்தறைப் பகுதியிலுள்ள வைத்திய நிலையங்கட்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் 29.10.63 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**நீர்ப்பாசன இலாகா**

என் 2465—முத்தையன் கட்டுக் குளக்கட்டு உயர்த்தல், உடைப்புகள் அடைத்தல் ஆகிய வேலைக்கான கேள்விப் பத்திரங்களை கொழும்பு 1 ல் உள்ள செயலகத்தின் 355 ம் இலக்க அறையிலுள்ள கமத்தொழில், காணி, நீர்ப்பாசனம், மின்சார அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 29.10.63 வரைக்கும் பெற்றுக்கொள்வார்.

என் 2467—ராசாங்கனை உட்பிரிவில் அங்கமுவ குளக்கட்டின் பிரதான முறிப்பு உட்பக்கத்தின் பாதுகாப்புக்கான கேள்விப் பத்திரங்கள் 25.10.63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 2491—வவுனியா உப-பிரிவில் சின்னப் பரந்தன் குளம் திருத்த வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் 12.11.63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 2493—குருணாகல் உப-பகுதியில் உள்ள நீர்ப்பாசன வேலைகட்கு கேள்விப் பத்திரங்கள் 29.10.63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வித்தியா பகுதி**

என் 2468—பால மா ஏற்றுமதிக்கான ரெண்டர் பத்திரங்கள் குருநாக்கல் வித்தியா கந்தோர் ரெண்டர் சபையால் 18.10.63 வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**இலங்கை அரச கடற்படை**

என் 2455—அலுமினியம் சல்பர் விநியோகிப்பதற்கான செப்டம்பர் மாதம் 13 ந் திகதி இலங்கை வர்த்தமானியில் கோரப்பட்ட கேள்விப் பத்திரங்கள், இத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

**நில அளவைக் காரியாலயம்**

என் 2459—கூடாரம் அதன் உபகரணங்களும் ஒப்படைத்தல் கேள்விக்கான முடிவு திகதி 26.11.63

**பொலிஸ் பகுதி**

என் 2487—சட்ட விரோதமாகக் குடியேறியவர்களைத் தலைமன்னார் பொலிஸ் தொற்றுநோய் பரவாத்தடை நிலயத்தில் மறித்து வைக்கப்பட்டிருப்போருக்கு உணவு கொடுப்பதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 7.11.63 வரையும் பொலிஸ் பிரதம அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன் முழு விபரங்களும் 4.10.63 ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1 ம் பகுதி, 11 ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலயங்களிலும் பார்வையிடலாம்.

# இ. போ. ச. செய்திகள்

(சென்ற வாரத் தொடர்)

**பின்வரும் புதிய சேவைகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அமுலாக்கம்செய்யப் படவிருக்கின்றன :—**

| **புதிய வழி** | **தொகுதி** |
|---|---|
| காலி—இரத்தினபுரி, தெனியாய வழியாக .. | .. காலி, தெனியாய இரத்தினபுரி |
| அனுராதபுரம்—மதவாச்சி புகையிரத நிலையம் | .. மதவாச்சி |
| ஹொரவபத்தான—வவுனியா (பாடசாலை சேவை) | .. மதவாச்சி |
| சூரியகந்தை—எம்பிலிப்பிட்டி .. | .. கொலன்ன |
| அரநாயக்க—மாவனெல்ல (பாடசாலை சேவை) | .. மாவனெல்ல |
| ஜா-எல—கம்பஹா, பொல்லத்த வழியாக .. | .. கம்பஹா |
| வீதியவத்த—கம்பஹா, அஸ்கிறிவல்பொல | .. மினுவாங்கொட |
| குருணகல்—ஹிரிப்பிட்டி, பன்னல வழியாக | .. ஹிரியால |
| பூனேவ—றம்பைக்குளம் .. .. | .. மதவாச்சி |
| அனுராதபுரம்—புல்மோட்டை .. | .. திருகோணமலை |
| அலவத்துகொட—பூஜாப்பிட்டி, ஹதிராம வழியாக | .. அக்குரான |
| அலவ்வை—நாவத்தல்வத்த .. | .. தம்பதெனியா |
| வவுனியா—உல்லுக்குளம் .. | .. வவுனியா |
| அனுராதபுரம்—கஹட்டகஸ்திகிலியா, றம்பேவ வழியாக | .. மதவாச்சி |
| கண்டி—அஸ்கிறியா .. .. | .. கண்டி |
| எப்பாவெல—தம்புட்டகம .. | .. வவுனியா |
| கடுகன்னுவ—தேகிந்த (பலன்ன) .. | .. யட்டிநுவர |
| மனுன—கஹன்தென்ன .. .. | .. கலவான |
| கிறிபத்கொட—கண்ணுஸ்பத்திரி, புதிய களனி பாலம் வழியாக | களனி |
| காலி—பட்டதுவ—மில்லிதுவ—காலி .. | .. காலி |
| அம்பாறை—பதுளை .. .. | .. அம்பாறை, பதுளை |
| கம்பொல—பொலன்னறுவை .. | .. கம்பொல பொலன்னறுவை |
| கேகாலை—அல்கம .. .. | .. தெடிகம |
| கேகாலை—பக்கியல்ல, மகியங்கனை வழியாக | .. கேகாலை, மகியங்கனை அம்பாறை |
| இரத்தினபுரி—எகலியகொட .. | .. இரத்தினபுரி |
| நீர்கொழும்பு—முகலன்கமுவ, ஆமென்பொழுவ வழியாக .. | கட்டானை |
| அம்பலாங்கொட—பலப்பிட்டி, பொல்வத்த, வத்துகெதற வழியாக .. .. | .. அம்பலாங்கொட பலப்பிட்டி |
| குருணகல்—கொபெய்கனே, பாதெனியா வழியாக | .. குருணகல் |
| தெகிவளை புகையிரத நிலையம்—அபேயசேகர வீதி, கவ்டான வழியாக .. .. | .. தெகிவளை, கல்கிசை |
| குருணகல்—மாத்தாவ, போகமுவ வழியாக | .. மாவத்தகம |
| வியாங்கொட—அலவல, அத்தனகலை வழியாக | .. அத்தனகலை |

**நீடிப்புக்கள்**

| | |
|---|---|
| குளியாப்பிட்டி—கிறியுள்ள சேவை, மீறிகம வரை நீடிப்பு .. | கட்டுகம்பொல |
| மட்டக்களப்பு—பொலன்னறுவ சேவை, அனுராதபுரம் வரை நீடிப்பு.. .. .. | .. மட்டக்களப்பு |

**போக்குவரத்துக் கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்ட இப்புதிய சேவைகள், சபையின் அங்கீகாரத்துக்காகக் காத்திருக்கின்றன :—**

| | |
|---|---|
| கம்புறுப்பிட்டி—றதவெல .. | .. கம்புறுப்பிட்டி |
| கண்டி—தொறகமுவ, பொல்கொல்ல, உடத்தலவின்ன | .. வத்தேகம |
| மனுன—எல்லகடே, நிக்காகொட வழியாக | .. கலவான |
| கேகாலை—வேறகொட, யட்டகொட வழியாக | .. கேகாலை |
| மாத்தளை—கலேவெல—மொறகொல்ல .. | .. தம்புல்ல |
| கண்டி—நானுஓயா, எழுகொட வழியாக .. | .. உடுநுவர |
| கஹவத்த—மியனவிற்ற, எந்தானை வழியாக | .. நிவித்திகல |
| ஜா-எல—றத்தோழுவ .. .. | .. ஜா-எல |
| கல்கிசை புகையிரத நிலையம்—அத்திடியச் சந்தி | .. தெகிவளை, கல்கிசை |
| ஹம்பாந்தோட்ட—திஸ்ஸ, வீரவில மார்புநோய் ஆஸ்பத்திரி வழியாக .. .. | .. திசமகராம |
| இரத்தினபுரி—எலபாத்த—திறிவானகெற்றியா | .. இரத்தினபுரி |
| கண்டி—தொடன்வெல, மகியாவ, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ் வழியாக .. .. | .. கண்டி |
| மகரகம—மக்குலுதுவ .. .. | .. கோட்டே |
| றிக்கிலிகஸ்கட—திம்புல்கும்புற .. | .. வலப்பனை |
| பேராதெனியா—பாரிகம .. .. | .. அக்குரான |
| குருணகல்—தொரட்டியாவ .. | .. மாவத்தகம |
| கண்டி—உடபேராதெனியா .. | .. கண்டி |

# தேசிய சேமிப்பு இயக்கம்

(1 ம் பக்கத் தொடர்)

மீது விதிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டுப் பாட்டையும் தொடர்ந்து, இலங்கைக்குள் கொண்டுவர எந்தப் பொருள்தடை செய்யப்பட்டதோ அந்தப் பொருளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தற்கு, புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. இப்பொருட்களின் தரம், கடந்த காலத்தில் இறக்குமதி செய்யப் பட்ட மிகச் சிறந்த பொருட்களுடன் சம மாகக் காணப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்டுள்ள சகல கைத் தொழில்களிலும் செய்யப்படும் முதலீடு களை முதலீடு செய்பவர்களுக்குக் குறிப் பிடத்தக்க வரிச் சலுகையுள்ள அங்கீ கரிக்கப்பட்ட முதலீடுகளாக நான் செய் துள்ளேன். இச்சந்தர்ப்பத்தை மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். புதிய, பலதரப்பட்ட கைத் தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

வருடா வருடம் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டங்களின் குறிக்கோள் உள் ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கு மிடையிலுள்ள இடைவெளியைக் குறைப் பதேயாகும். அத்தியாவசியப் பொருட் களின் விலைகளைக் குறைத்ததனாலும் குறைந்த வருவாயுள்ளவர்களின் வரிப் பளுவைக் குறைத்ததனாலும் சமீபத்தில் நான் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் எதிர்காலத்தில் குறைந்த வருவாயுள்ள வர்கள் மேலதிகமாக சேமிக்க வாய்ப் பளிக்குமென்பதில் எனக்குச் சந்தேகமே யில்லை. இந்த சேமிப்புகளை அரசாங்கம் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் முத லீடு செய்க்கூடியதாக அவர்கள் தேசிய சேமிப்பில் போடுவார்களென நான் நம்புகிறேன்.

எங்கள் இலங்கைச் சேமிப்புப் பத்திரங் களைப்பற்றி விசேஷமாகக் குறிப்பிடவிரும் புகிறேன். நாங்கள் அறிந்த நாடுகள் எதிலும் அவற்றின் மக்களுக்கு வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ள சேமிப்பு நிதி யிலும் பார்க்க இது அதிக கவர்ச்சி வாய்ந்தது. இலங்கைச் சேமிப்புப் பத்தி ரத்துக்கு வழங்கப்படுவதைப் போன்ற கூடிய அளவு வட்டி விகிதம் மற்றெந்த நாட்டின் சேமிப்புப் பத்திரத்துக்கும் அளிக்கப்படுவதில்லை. அது 10 வருடங் களில் 50% வீதமாக அதிகரிக்கிறது. நூறு ரூபா சேமிக்கப்பட்டால், பத்து வருடங்களில் அது நூற்றைம்பது ரூபா வாகிறது. இதனை எப்போது வேண்டு மானாலும் மாற்றிப் பணம் பெறலாம். ஐந்து வருடங்களுக்கே சேமிப்பாக இருக்க விடப்பட்டாலும், சேமிக்கப்பட்ட ஒவ்வொரு 100 ரூபாவுக்கும் 20 ரூபா வட்டிதரப் படுகிறது. இத்தகைய வட்டிக்கு வருமான வரி இடையாது. சேமிப்பாக முடிக்கப்படும் தொகைக்குச் செல்வ வரியும் இடையாது. ஏழை, பணக்காரர் இரு பிரிவினருக்கும் இம்முதலீடுகளைச் சிபார்சு செய்கிறேன்.

சோஷலிஷப் பாதையில் அரசாங்கம் நாட்டை நடத்திச் செல்கிறது. தேசிய சேமிப்பில் எவ்வளவிற்கு நீங்கள் முத லீடு செய்கிறீர்களோ அவ்வளவிற்கு உங் கள் லட்சியம் அண்மையில் வந்துவிடும். கைத்தொழில் அபிவிருத்தியின் மூலமே வறுமையையும், வேலையின்மையையும் ஒழிக்க முடியும். இதற்கு மூலதனம் வேண்டியுள்ளது. உங்களின் சேமிப்பு களின் மூலம் உங்களுக்கு நீங்களே மூல தனம் திரட்டுகிறீர்கள். தேசிய சேமிப்பில் முதலீடு செய்வதன் மூலம், நாட்டுக்கும் நீங்கள் மூலதனம் திரட்டுகிறீர்கள்.

முன்னர் சேமித்து வந்தவர்களைத் தொடர்ந்து சேமிக்குமாறும், இதுவரை சேமிக்காது இருந்தவர்களை இனிமே லாவது சேமிக்கத் தொடங்குமாறும் பல மாக வற்புறுத்துகிறேன்.

தேசிய சேமிப்பின் கொடி நாடு முழு வதிலும் பறக்க உதவிய ஒரு பெரும் ஊழியர் சேனை உண்டு என்பதை அறி வேன். பதின்மூவாயிரம் சேமிப்புக் குழுக் களின் உத்தியோகத்தர்கள் ஆற்றிவந் துள்ள நற்பணிக்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். கடவத்தை சேமிப்புத் திட்டத்தின்கீழ், தூரத்துக் கிராமங்களுக் கும் சென்று சேமிப்பு முத்திரைகள் விற்ற பெண் தொண்டர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். இச் சமூக சேவை ஊழியர் சேனையில் வருகிற வருடத்தில் இன்னும் அநேகர் சேருவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

துரிதமாக மாறிவரும் ஓர் உலகத்தில் வாழ்ந்து வருகிறோமென்பதை நாம் அனைவரும் நன்கு உணருகிறோம். ஆயி னும் அம்மாற்றத்தின் வேகம் போகிற போக்கில் அதிகரித்துக்கொண்டே செல் லும் விதத்தை உணர நம்மில் பலர் தவறிவிடுகிறோம். அண்டத்தையும் மனி தனுடைய உள்ளத்தையும் ஆழமாக ஒரே சமயத்தில் ஊடுருவிச் செல்லும் வியக்கத்தக்க விஞ்ஞான, நுண்தொழில் கண்டுபிடிப்புகள் உண்மையில் நம் முன் னோர்கள் காணாத விதமானதும் தர மானதுமான ஆபத்தும் வாய்ப்புமுள்ள ஒரு புதிய தோற்றத்தை நமக்கு இக் காலத்தில் அளிக்கின்றன. ஆயினும், அந்த விஞ்ஞான முன்னேற்றங்களைவிட மனித சமுதாயத்தில் செய்யப்படும் முன் னேற்றங்களே அதி முக்கியமானவையா கும். பல்வேறு நாடுகளிலுள்ள பெருந் தொகையான மக்கள் புதிய இலட்சியங் களையும் புதியதொரு உலகத்தையும் சிருஷ்டித்து, முன்னேறி வருகிறார்கள். அவர்களுடன் நாமும் சரிசமமாகச் செல்ல வேண்டுமாயின் நாம் சோம்பேறிகளாக விருக்காமல் புதுணர்ச்சியால் தூண்டப் பெற்று எங்களை எதிர்நோக்கியுள்ள சிறந் காலத்தின் பெறுபேறுகளை அனுபவிக்கக் கூடியதாக முன்னேறிச் செல்லவேண் டும். ஆகவே, எதிர்வரும் ஆண்டில் சிறிய சேமிப்புகளாக இந்த 12 கோடியே 50 லட்ச ரூபாவைத் திரட்டும் இவ்வாடம்பர மற்ற குறிக்கோளை எய்துவோமாக !

# நைஜீரிய குடியரசு அங்குரார்ப்பணம்

**மகாதேசாதிபதியின் வாழ்த்துச் செய்தி**

“ நைஜீரியக் குடியரசு அங்குரார்ப் ணம் செய்து வைக்கப்பட்டதுடன், எதிர் காலத்தில் உங்கள் உன்னத நாட்டின் மக்கள் சந்தோஷத்துடனும் செழிப்புட னும் வாழவேண்டுமென இலங்கை மக் கள் என்னுடன் சேர்ந்து நல் வாழ்த்து கூறுகின்றார்கள் ” என்ற வாழ்த்துச் செய்தியை இலங்கை மகாதேசாதிபதி அவர்கள் நைஜீரியக் குடியரசு தலை வருக்கு அனுப்பியுள்ளார்.

# இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

**10. 10. 63 தொடக்கம் 15. 10. 63 வரை**

**வியாழன்**

**ஒக்டோபர் 10**

காலை

6-45 உதய கீதம்
6-50 சைவ நற்சிந்தனை‡
இ. பெரியதம்பிப் பிள்ளை
6-55 இஸ்லாமிய நற்சிந்தனை—
எம். பீ. எம். மாஹீர்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தேர்ந்த இசை†
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 ஓடிவிளையாடு பாப்பா
5-45 திரை இசை†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை—**
உணவுப் பெருக்கம்
6-45 வாத்யகோஷ்டி நிலைய வித்வான்
7-00 பேச்சு—" நாடும் நாமும் "
7-15 நேயர் விருப்பம்†
7-45 தொடர் நாடகம்—
" **முத்தொள்ளாயிரம்** "—முதலாம் அத்தியாயம்
" **கோதை** "—1
" திமிலைத்துமிலன் "—எழுதியது
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—கிராஅத் †
8-15 திருக்குர்ஆன் விளக்கப் பிரசங்கம்—
மவுலவி பீ. எம். அப்துல் காதர்
8-45 பாட்டு—
எம். எச். எப். அமீர்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 லயவின்யாசம்—மிருதங்கம்
ஏ. எஸ். ராமநாதன்
9-30 குரல்வகை
10-00 நிலைய ஒலிப்பதிவுகள்
10-30 ஒலிபரப்பு முடிவு

★ ★ ★

**வெள்ளி**

**ஒக்டோபர் 11**

காலை

6-45 பாமாலை†
6-55 இஸ்லாமிய நற்சிந்தனை†
எம். பீ. எம். மாஹீர்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தோத்திரப் பாடல்கள்
ஆர். சோமநாதன்
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 நாகசுரம்‡
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை—**
திருக்குறள் வகுப்பு
யுனெஸ்கோ சித்திரம்
6-45 வீணை—நிலைய வித்வான்
7-00 ஞானாஞ்சலி—
7-30 நேயர் விருப்பம்†
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**
உறுதுப் பாடல்கள்†
8-15 நாடகம்—
" **அற்புதத் தண்டனை** "—
பிரதி : எம். ஏ. முஹம்மத்
8-45 இஸ்லாமிய கீதம்†
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 விமர்சனம்—
9-30 பாட்டு
லீலா துரைசிங்கம்
10-30 ஒலிபரப்பு முடிவு

★ ★ ★

**சனி**

**ஒக்டோபர் 12**

காலை

6-45 உதய கீதம்‡
6-50 சைவ நற்சிந்தனை‡
இ. பெரியதம்பிப்பிள்ளை
6-55 கத்தோலிக்க நற்சிந்தனை—வண. பிதா. ஜெரோம்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 மூவர் இசை†
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 இளைஞர் மன்றம்
5-45 திரை இசை†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை—**
சிங்கள சிங்கி நாடகம்
6-45 வயலின்—பி. எஸ். மணி ஐயங்கார்
7-15 **கண்டதும் கேட்டதும்—**
செய்திச் சுருள்
7-30 நேயர் விருப்பம்†
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**
மலாய்ப் பேச்சு " வாரீர் மலாயீர் "—
(மறு ஒலிபரப்பு)
8-15 பேச்சு—
" முஸ்லிம் ஆசிரியைகளும் மாணவிகளும் " —செல்வி ஏ. பரீதா பாரூக்
8-30 பாட்டு—ஓ. ஷரீப்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 பேச்சு—
" திருவேங்கடக் கலம்பகம் " அருள். தியாகராசா
9-30 பாட்டு—லக்ஷ்மி நடராஜன்
10-30 ஒலிபரப்பு முடிவு

★ ★ ★

**ஞாயிறு**

**ஒக்டோபர் 13**

காலை

6-45 பாமாலை‡
6-55 கத்தோலிக்க நற்சிந்தனை—வண. பிதா. ஜெரோம்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தேர்ந்த இசை†
7-45 திரை இசை†
8-15 தமிழ் மூலம் சிங்களம்
என். டி. பீரிஸ்
8-30 ஞானாஞ்சலி—(மறுஒலிபரப்பு)
9-00 இஸ்லாமிய சமய பாடசாலை—நடத்துபவர் :
மவுலவி ஏ. றஹ்மான்
9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி—நடத்துபவர் :
வண. தி. பி. டானியல்
10-00 ஒலிபரப்பு முடிவு

பகல்

10-30 **சிறுவர் மலர்**—தயாரிப்பு :
வானொலி மாமா
12-15 நேயர் விருப்பம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 மாதர் பகுதி—
1. உலக நாடுகளில் பெண்கள்—பேச்சு
அலிஸ் துரயிஸ் பிள்ளை
2. பலதும் பத்தும்
3. உங்கள் கேள்விகள்
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 பாட்டு—நீலா ராமசாமி
5-45 திரைக்குரல்†
6-00 செய்திகள்
6-10 குரல்வகை
6-30 தாளவாத்ய கச்சேரி—மிருதங்கம்—
என். ஆறுமுகம் பிள்ளை
கஞ்சரா— வி. கணபதியா பிள்ளை
கடம்—கே.கே. அச்சுதன்
7-00 மாதர் கேட்டவை†
7-30 பாட்டு—என். கந்தசாமி
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**
மணிமொழிகள் பேசுவர் : மவுலவி எம். ஐ. அப்துல லத்தீப்
8-15 மாணவர் மன்றம்—மக்கொனை முஸ்லிம் வித்தியாலயம்
8-30 சலவாத்து மகிமை——பிரதி : ஏ. எம்.கே. மரைக்கார்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புக்கள்
9-15 நாடகம்—" **தியாகம்** "—ஜோவலன் வாஸ் எழுதியது
9-45 நிலைய ஒலிப்பதிவுகள்
10-15 இசையமுதம்
10-30 ஒலிபரப்பு முடிவு

★ ★ ★

**திங்கள்**

**ஒக்டோபர் 14**

காலை

6-45 பாமாலை‡
6-55 கத்தோலிக்க நற்சிந்தனை‡ வண. பிதா. ஜெரோம்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 மூவர் இசை†
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 நிலைய ஒலிப்பதிவுகள்‡
5-45 திரை இசை†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராமசஞ்சிகை—**
தேவசளம் சாசணர் நிகழ்ச்சி
6-45 வயலின் நிலைய வித்வான்
7-00 நேயர் விருப்பம்†
7-30 வீணை— தனலக்ஷ்மி விஸ்வநாதன
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**
உறுதுப் பாடல்கள்†
8-30 செய்தித் தொகுப்பு
8-45 பாட்டு—ஏ. எஸ். அப்துல் காதர்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 தமிழ் மூலம் சிங்களம்—மறு ஒலிபரப்பு
9-30 இசையமுதம்
9-45 பாட்டு—வி. சுந்தரம்
10-30 ஒலிபரப்பு முடிவு

★ ★ ★

**செவ்வாய்**

**ஒக்டோபர் 15**

காலை

6-45 உதயகீதம்
6-50 சைவநற்சிந்தனை
கே. பி. ஹரன்
6-55 இஸ்லாமிய நற்சிந்தனை
மவுலவி எச். சலாஹுத்தீன்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்பு
7-15 தேர்ந்த இசை†
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**—பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 வளரும் பயிர்
5-45 திரை இசை†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 கிராம சஞ்சிகை—உணவுப் பெருக்கம், பொருளாதார சமூக வளர்ச்சி
6-45 புல்லாங்குழல்—நிலைய வித்வான்
7-00 நேயர் விருப்பம்†
7-30 " இருபது கேள்விகள் " 33 வது நிகழ்ச்சி தயாரித்து நடத்துபவர் " சானு "
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—நேயர் கேட்டவை
(நிலைய ஒலிப்பதிவுகள்)
8-30 பேச்சு—" எனது வெளிநாட்டு அனுபவங்கள் " எம். பி. எம். மாஹிர்
8-45 பாட்டு—ஏ. எம். நூர்தீன்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 இசை கடந்த இசை
9-45 நாகசுரம்— வி. குமாரசாமி
10-30 ஒலிபரப்பு முடிவு.

† இசைத்தட்டு ‡ நிலைய ஒலிப்பதிவு


உங்கள் பணத்துக்கு
அதிகம்

கைத்தொழிற் பொருட்காட்சி

**சுவீப்**

**254 பரிசுகள்**

ஒவ்வொரு மாதமும்

1963, பெப்ருவரி மாதம் 14 ந் திகதி
துவக்கம் மாதம் இருமுறை
சீட்டிழுப்பு

ரிக்கற் ஒன்றை வாங்கி
பரிசு ஒன்றைப் பெறுங்கள்


இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 12634—5,007 (10/63)